[1987 நவம்பர் 13

குசஸ்தலை ஆற்றின் குறுக்கே தரைப்பாலம்

102—(*வினா எண் 13214) திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தாலுக்காவிலுள்ள நல்லாரூன் கிராமத்திற்கு செல்ல குசஸ்தலை ஆற்றின் குறுக்காக தரைப்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மூழ்கு பாலம் ஒன்று கட்ட சுமார் ரூ. 50.00 இலட்சம் ஆகும். இப்பணி பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ளும் பொருட்டு பணி தொகுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலைமை மற்றும் பணி முக்கியத்துவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு எதிர் வரும் ஆண்டுகளில் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குசஸ்தலை ஆற்றின் குறுக்காக நல்லாற்றூர் கிராமத்திற்கு செல்வதற்கு தரைப்பாலம் கட்டுவதற்கான பணம் ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவருக்கு முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று தெளிவாகத் தெரிவிக்காத காரணத்தால், அதை அடுத்த ஆண்டே எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இதனால் 15 கிராமங்களை இணைக்கின்ற, போக்குவரத்து சென்று வரக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்ற காரணத்தால் அடுத்த பட்ஜெட்டில் இது இடம் பெறுவதற்கான வாய்ப்பை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு 50 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கு போடப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் எங்கெங்கே பாலங்கள் கட்டவேண்டியிருக்கின்றன ; பாதைகள் அமைக்கப்படவேண்டி இருக்கின்றன என்பதற்காக ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டியலிலே இது சேர்ந்திருக்கிறது. ஆனால் எந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று இப்போது என்னால் சொல்ல

1987 நவம்பர் 13]

முடியாது. காரணம், நிதிப் பிரச்சினை ஒன்று. அடுத்து, அந்தப் பணியினுடைய முக்கியத்துவம் கருதி எதை முன்னாலே எடுத்துக்கொள்வது, எதைப் பின்னாலே எடுத்துக்கொள்வது என்று கணக்குப் போடுகிறபோது, அடுத்த ஆண்டா, அல்லது அதற்கு அடுத்த ஆண்டா அல்லது அதற்கு அடுத்த ஆண்டா என்பதை இப்போது என்னால் சொல்ல முடியாது. பணியினுடைய முக்கியத்துவத்தைப் பொறுத்து அதற்குத் தகுந்த இடம் கிடைக்கும்.

திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளாக இப்படியே நாம் அதிகாரி பெருமக்களைச் சந்திக்கிறபோது, சொல்லி காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் இது பரிந்துரை செய்யப்பட்டு அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்தாலும், அதற்கு ஆகும் செலவு 50 இலட்சமாக இருக்கிற காரணத்தால், நிதிநிலை இடம் கொடுக்கவில்லையென்ற காரணத்தையே சொல்லிக்கொண்டு வருகின்ற காரணத்தினால் அந்த மதிப்பீட்டைக் குறைத்தாவது, தரைப்பாலமாகவாவது குறைந்தது 25 இலட்சம் மதிப்பீட்டிலே போடுவதற்கு வாய்ப்பு இருக்குமேயானால், அப்படிப் போட்டுக் கொடுத்தாலும்கூட அந்தப் பகுதி மக்களுக்கு அது நல்ல வாய்ப்பாக அமையும். ஆகவே, அதை மீண்டும் பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்க விரும்புகிறேன்.

சட்டமன்றப் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்வதைத் திருந்தச் செய்துவிடுவது தான் நல்லது. எனவே, மதிப்பீட்டைக் குறைத்து இப்போதைக்குஒன்று, பின்னாலே ஒன்று என்று செய்வது பொருத்தமாக இருக்காது. இதிலே பணி முக்கியத்துவத்தைக் கருதி என்று நான் ஏற்கனவே சொன்னபடி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலேகூட பல வேலைகள் நடந்திருக்கின்றன. அந்த வேலைகள் எல்லாம் இதைவிட முக்கியம் என்ற காரணத்தால் முன்னாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. இது முக்கியம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற காரணத்தால், ஆய்வு செய்து, இருக்கின்ற மற்ற வேலைகளோடு ஒப்பிட்டு பார்த்து நடவடிக்கை எடுக்கலாம்.